# வைத்திய சந்திரிகா



# वैद्यचान्द्रिका


தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை

Vol. 9 | November, 1947 | No. 11



ஆசிரியர் ;

V. B. நடராஜ சாஸ்த்ரீ, *ஆயுர்வேதாசார்ய.*
*வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.*

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

# வைத்தியர்களுக்கு

## :: முக்கியமான அறிவிப்பு ::

* * *

தங்களுடைய

அரிய நேரத்தை

மருந்துகள் தயார் செய்வதில்

செலவழிக்காமல் தங்களுக்காக மிகுந்த

சாஸ்திரப் பயிற்சி பெற்ற வைத்தியர்களைக்

கொண்டு சாஸ்திர முறைப்படி உயர்ந்த

சரக்குகளை சரியாகச் சேர்த்து

மருந்துகளைத் தயார்செய்து

வைத்திருக்கும்

* * *

## திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் லிட்.,

**சின்னக் கடைத் தெரு, தெப்பக்குளம், P. O. திருச்சி.**

இடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

---

*N. B:—* வைத்தியர்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு மருந்துகள் சப்ளை செய்யப்படும்.

# MODEL PHARMACY,
## BEZWADA.



MP's

**மாடல் பார்மஸியின்**

**கைகண்ட ஔஷதங்கள்**

**பிளட்-டோன்:** இரத்த வீர்ய விருத்திக்கும் இதர கோளாறுகளுக்கும் இன்றியமையாத ஓர் பொது டானிக்

**காப்பீன்ஸ்:** இருமல் ஜலதோஷம் இவைகளுக்கு ஓர் கைகண்ட மருந்து

**மலேனல்:** மலேரியா ஜுரத்திற்கு கொய்னா சம்பந்தமில்லாத சிறந்த ஔஷதம்

**மென்ஸால்:** ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது

**சிசுடோன்:** குழந்தைகள் தேக வளர்ச்சிக்கு ஓர் சஞ்சீவி

**மில்கோபின்:** தாய்மார்களுக்கு குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பாலை அதிகரிக்கவல்ல சிறந்த ஔஷதம்

**மாடல் பார்மஸி, பெஜவாடா.**

**பூர்ண விற்பனை உரிமையாளர்:**

**ராஜா ராம்சந்தர் & கம்பெனி,**

***520. திருவல்லிக்கேணி ஹைரோட், மதராஸ்-5.***

Sole Distributors: RAJA RAMCHANDER & Co.,
520, High Road Triplicane, Madras—5

**Stocks available from;**

Appah & Co. Esplanade, Madras.

South Indian Medical Stores Ltd., Raja Street, Coimbatore.

The Trichy Ayurvedic Union Ltd.. Chinnakadai Street, Trichinopoly.

Sivanandam & Co. 7, East Avani moolai Street, Madura.

The Erode Medical Supplies Ltd., Erode.

Kandan Drug Stores, Mettupalyam.

General Stores Canteen, Nursing Home, Dharapuram.

Messrs. C. Arumugam Pillai & Sons Shop-keepers & General Merchants, Dindigal.

Chandra Pharmacy, Rama Nilayam, North main Street, Pudukkottah

The Ideal Agencies, Singh Medical Hall. Chekkalai Road, Karaikud

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகா.

தொகுதி 9] நவம்பர், 1947 [பகுதி 11

ஆரோக்ய சந்த்ரிகா —

| | | |
|---|---|---|
| சிசு பரிபாலனம் | ... | 285 |
| மணி-மந்திர-அவுஷத ஆராய்ச்சி | ... | 296 |
| ஆயுர்வேதத்தின் ஆபத்து | ... | 302 |
| Questionnerie issued by the Indian Medical Association | ... | 303 |
| Appeal for University | ... | 309 |
| All India Ayurvedic Congress | ... | 311 |
| Appeal to the Ayurved world | ... | 312 |

GERMOL.

:: ஜெர்மால். ::

சொரி, சிரங்குகள், மூன்று நாளில் குணம்.

***

SCIENTIFIC INDUSTRIALS,

13. BROUGH ROAD,

ERODE. S. I.

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
மாதப் பத்திரிகை.

இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும்.

**வருஷச் சந்தா ரூ. 3-0-0**

பத்திரிகைக்கும், மண்டலத்திற்கும் சந்தா ஸம்பந்தமான வர்ஷாரம்பம் ஜனவரி முதல் டிஸம்பர் முடிய (Calender year) 1948-ம் வருஷத்திய சந்தாவை 1948 ஜனவரி 7-தேதிக்குள் அவசியம் அநுப்பிவிடப் பிரார்த்திக்கப்படுகிறது.

சந்தா, விளம்பர விஷயங்கள் அனுப்பவேண்டிய விலாஸம் :—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
உபகார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிறுப்பள்ளி.

சந்தாதாரரின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ம் தேதிக்குள் சந்திரிகை கிடைக்காவிடினும் மேற்படி விலாஸத்திற்கு உடனே தெரிவிக்கவும்.

---

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய,
ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,
ஆத்ரேயாசிரமம், தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு சந்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், ஸந்தேஹங்கள், பதில்கள், சர்ச்சைகள், சிகித்ஸைக் குறிப்புகள், (Case Sheets) விமர்சத்திற்கு புத்தகங்கள், பதில் பத்திரிகைகள் இவை போன்றவை யெல்லாம் அனுப்பப்படவேண்டும்.

குறிப்பு :— சந்திரிகையில் பிரகாசமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் மதபேதங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி யல்ல. பிரசுரத்திற்கு அநுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒருபக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு.

# செய்திக் குறிப்பு

கோவையில் சென்ற மாதத்தில் நடந்த இந்தியன் மெடிகல் அஸோஸியேஷனுடைய வருஷாந்திரக் கூட்டத்தின் வரவேற்பு உரையில் ஆங்கில வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் முதலிய எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து ஒரே வைத்தியசாஸ்திர முறையாக்க வேண்டுமென்று கூறினார். ஆனால் மேற்படி இந்தியன் மெடிகல் அஸோஸியேஷனில் L. I. M. வைத்தியர்கள் மெம்பராய் சேருவதற்குக் கூட முடியாதென்று தலைவர் L. I. M. களுடைய கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

---

## திருச்சி ஆயுர்வேத சபா:

ஷை ஸபாவின் மாதாந்தரக் கூட்டம் 1947-ஞு அக்டோபர்-மீ 28உ செவ்வாய்க்கிழமை மாலை, 4-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீரங்கம் V. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காலராவைத் தடுக்கும் முறை எப்படி என்பது பற்றி சர்ச்சை நடந்தது. ஆயுர்வேத ஆசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்த்ரிகளவர்கள், ரஸ பர்படியுடன் கடுக்காய்ச் சூர்ணமும் கலந்து காலை, மாலை தேனுடன் கொடுத்து வந்தால் காலரா வராமல் தடுக்கலாமென்று சொன்னார். மற்றொன்று தாம்ரத்தை சரீரத்தில் படும்படி தாம்ர மோதிரமாக செய்து கையில் போட்டுக்கொண்டால் நலம் என்றும் கூறப்பட்டது. ஆஸவாரிஷ்டங்களும் மதுவிலக்குச் சட்டமும் என்பதுபற்றி ஆலோசித்து அடியில்கண்ட தீர்மானம் நிறைவேறியது. தத்காலம் ஏற்பட்டிருக்கும் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் ஆஸவாரிஷ்டங்கள் (ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்டவை) சேர்க்கப்பட்டிருக்கின்றனவா, அல்லவா, என்பதைத் தெரிந்துகொள்ளவும், அப்படி சேர்க்கப்பட்டிருந்தால் ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்படும் ஆஸவாரிஷ்டங்கள் போதை கொடுப்பவைகள் அல்லாததால் மதுவிலக்குச் சட்டத்தில் சேர்க்கப்படாதபடி அரசாங்கத்தில் ஸகல கார்யங்களையும் செய்யத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவும் ஸபைத் தலைவர் ஸ்ரீமான் V. சுப்ரமண்ய அய்யர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. நவம்பர்-மீ த்தில் ஷை ஸபாவின் வர்ஷிகோத்ஸவம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

—V. R. **சுப்ரமண்ய அய்யர்**, கார்யதரிசி.

# :: சிசு பரிபாலனம் ::

*[வைத்திய வாசஸ்பதி, பண்டித ஸ்ரீ P. S. ராமசர்மா, கரூர்.]*

கற்பிணியைக் காப்பாற்றுவதில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அதை விட மிகவும் அதிகமான கவனம் பிரஸவித்த பிறகு தாய் குழந்தை இருவருக்கும் செலுத்தப்பட வேண்டும். தாயை ஓர் பெரிய சஸ்திர சிகித்ஸை (Major Operation) செய்யப்பட்ட நோயாளியின் நிலைமையில் வைத்துக் கவனிக்கவேண்டும். தாயின் கர்ப்பத்தை விட்டு வெளி வந்த குழந்தை சௌகர்யமான இயற்கை யன்னையின் பாதுகாப்பில் வளரப்பட்டு வந்து திடீரென்று இவ் வுலக வெளியில் தோன்றுவது, உலகக் கஷ்டங்களை அறியாது மிகவும் செல்வமாக வளர்ந்து வந்த ஓர் சுகவாசி, தேசம் பாஷை முதலியவை தெரியாமல் ஓர் புதிய இடத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டால் அடையும் நிலைமைக்குச் சமானமானது. ஆனால் அவ்வித்ம் முன் பின் அறிமுக மில்லாத நிராதரவாக வரும் மனிதனை நாம் எவ்வளவு தூரம் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பது, கர்ப்பத்திலிருந்து வெளிவரும் குழந்தைக்குச் செய்யும் உபசாரத்திலிருந்து விளங்குகிறது. பழகிய மனிதர்களை விட அறிமுக மில்லாதவர்களை பகுத்தறிவுடைய மனிதர்கள் மிகவும் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை விளக்கும் பாடமாகவே சிசு பரிபாலனத்தின் தத்துவம் அமையப் பெற்றிருக்கிறது.

பூவுலகில் தோன்றும் பொழுதே இயற்கைத் தாய் மனிதருக்கு மட்டுமில்லாமல் சகல ஜீவராசிகளுக்கும் இவ் வுயர்ந்த தர்மத்தைக் கற்பிக்கிறாள். (தர்மம் என்பது நான்கு பிரிவுகளுடையது. அவை யாவன) ஸத்யம் (உண்மை), தானம் (ஈகை), தயை (ஜீவ காருண்யம்), சௌசம் (சுத்தம்). இந் நான்கு தர்மத்தையும் பெற்றோர்கள் இயற்கையாலேயே தூண்டப்பட்டு தங்களு

டைய குழந்தைகளிடத்தில் முற்றிலும் அனுஷ்டித்து வரு வதைக் கவனித்தால் கடவுள் மனிதனை தர்மத்தின் ஸூக்ஷ மம் தெரிந்து பகுத்தறிவுடையவனுகச் செய்வதற்குத்தான் குழந்தையைத் தந்தருள்கிருர். என்று தெரிகிறது, சந்ததி யில்லாதாருக்கு பரலோகம் மோக்ஷம் முதலியவை கிடை யாது என்று கூறும் நமது ஹிந்து மதசாஸ்திரங்கள் எவ் வளவு உயர்ந்த லக்ஷ்யத்தைக் கொண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும்! இந்த தத்துவத்தை அறிந்த திருவள்ளுவர்—

**" எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின் "**

என்று உபதேசித்தார், ஆகையால் மிகுந்த உரிமையுடன் வரும் விருந்தாளி போல் குழந்தையை எண்ணுவது உசிதம். இதிலிருந்தே நமது சாஸ்திரங்களில் கூறப்படும் ஒருவருக்கொருவர் ஏற்பட்ட கடன்களை அனுசரித்த மறு பிறப்பு முதலியவை முற்றிலும் உண்மை யென்றும் விளங் குகின்றன.

ஆகையால் இந்த தத்வங்களை ஆராய்வதிலிருந்து ஒவ் வொருவரும் குழந்தைகளை உபசரிக்க மிகவும் கடமைப் பட்டிருப்பதுடன், இவ்விதம் குழந்தைகளை வளர்ப்பது பகுத்தறிவையும் தர்மத்தையும் கற்பிக்கக் கடவுளால் ஏற் படுத்தப்பட்ட ஓர் பள்ளிக்கூடமென்பதை அறிந்துகொள் ளாமல், குழந்தைகளைப் பெற்று கொஞ்சிக் குலாவும் மனி தன் பிறரிடம் தயாதாக்ஷிண்யம் இல்லாமல் நடப்பது விந் தையிலும் விந்தையே! ஆகையால் இயற்கையாகவே பெற்ருேர்கள் குழந்தயை ஆதரிக்கும் மனப் பான்மை கொண்டிருந்த போதிலும் அதன் வழிகளை நன்ருகப்புரிந்து கொள்ளாமல் செய்யப்படும் பணி விபரீத பலனைத் தரக் கூடியதாக நேரிடும். குழந்தைகள் பிறந்த வுடன் திடீ ரென்று வயிறு உப்பியும் மூர்ச்சையடைந்தும், கைப் பிடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டும் தினறிக் கொண்டும் அழமுடியாமல் கஷ்டப்படும் காரணம் தெரி யாமல் உபேக்ஷை செய்தால், சுவாசம் வலிப்பு மாரடை ப்பு முதலிய பல நோய்கள் ஏற்படும்.

பிறந்தவுடன் குழந்தை அழாமலிருந்தாலே அது ஒரு அசாதாரணமான குறியாகும். சில பிரஸவங்களில் கர்ப்

பத்திலிருந்து வெளிவரும் குழந்தை, களைத்துப் போவதுடன் வரும் வழி நெருக்கமாக ஏற்பட்டு கர்ப்பநீரை நிறையக் குடிக்கும்படி நேர்ந்துவிடுகிறது. இதேமாதிரி தவறுதலான பாகங்கள் (தலைக்குப் பதிலாக நெற்றி, ஆசனம், கால், முகம் முதலியன) வெளிப்பட்டு மிகவும் சிரமப்பட்டோ அல்லது ஆயுதங்களின் சகாயத்தாலோ நேரும் பிரஸவங்களிலும் கர்ப்பநீரைக் குடிப்பதாலும் அதிர்ச்சியாலும் களைப்பாலும் இந்நிலைமை ஏற்படுகிறது. மூச்சு விட்டுக் கொண்டிருந்தால் குழந்தை அழாமலிருக்காது. ஆகையால் உடனே மூச்சு வரும்படியான காரியங்களைச் செய்யவேண்டும். இந்தக் குழந்தையை ஜலத்தில் மூழ்கி மூச்சுத் திணறி தண்குடித்து உயிர் உள்ளடங்கி இருப்பதற்குச் சமமாகப் பாவித்துச் சிகித்ஸை செய்ய வேண்டும்.

இந்நிலைமையில் உடனடியாக கவனம் செலுத்துவதனால் நல்ல பலன் கிடைக்கும். இந்நிலைமையை ஆங்கிலத்தில் Asphyxia என்று கூறுவார்கள். இதை இருவகையாகப் பிரிக்கவேண்டும். ஒரு நிலைமையில் குழந்தை நீலம் பாரித்துக் காணப்படும். இது மூச்சு நின்றுபோய் அதிக காலம் தாமதிக்காமலிருக்கும் நிலைமை. காலம் செல்லச் செல்ல இந்த கரு நீலம் கலந்த நிறம் மாறி வெளுத்துப் போகும். வெளுத்துப் போகும்பொழுது மூச்சு நின்று அதிக காலம் ஆகியிருக்கவேண்டும். ஆகையால் இதை அதிக அபாயகரமான நிலைமையாகக் கருதவேண்டும்.

இவ்விரு நிலைமையையும் பகுத்தறிந்து அதற்குவேண்டிய பரிஹாரம் தேடவேண்டும். ஏனென்றால் வெளுத்த நிலைமையில் எந்தவிதமான பரிஹாரம் தகுதியற்றதோ அதாவது உயிருக்கே கெடுதலை விளைவிக்கக் கூடியதோ அதே உபசாரம் நீல நிலைமையில் உயிரைத் திரும்பக் கொண்டு வரும். இரண்டு நிலைமையை அடைந்த ஒரே கோளாறுக்கு இவ்விதம் வேறுபட்ட சிகித்ஸை செய்ய வேண்டியிருப்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்நிலைமையில் குழந்தை பிறந்தால் உடனடியாகத்

தொப்பிள் கொடியை அறுத்துவிட வேண்டும். காலதாமதம் செய்வது தகுதியாகாது.

சாதாரணமாக தொப்பிள் கொடியின் துடிப்பு அடங்கிய பிறகுதான் அதை அறுப்பது வழக்கம். ஏனென்ருல் தாயின் உடம்பிலிருந்து குழந்தைக்கு வந்து சேரும் ரக்த ஓட்டம் நிற்காததால் தான் அது துடிக்கிறது. ஆகையால் துடிக்கும் பொழுதே அறுப்பதால் குழந்தை உடம்பில் சேரத் தயாராக வந்துகொண்டிருக்கும் சிறிது அளவு ரக்தம் வீணுகிறது. சாதாரண நிலைமையில் இதைக் கவனிக்க வேண்டியது அவசியமே. ஆனுல் இம்மாதிரி அபாயகரமான நிலைமையில் இந்த சிறிது அளவு ரக்தத்தை எதிர் பார்க்காமல் உடனடியாகத் தொப்பிள் கொடியை அறுத்துவிட வேண்டும்.

அனுபவமில்லாதவர்கள் தொப்பிள் கொடியை அறுப்பதால், **असम्यक्कल्पने हि नाड्या आयामव्याया मोत्तुण्डिता पिंडलिका विनामिका विजृंभिका बाधेभ्यो भयम्—**
என்று சரகாசாரியார் சொல்லியபடி, குழந்தையின் தொப்பிள் உப்பிப் போயும், புண் ஆருமலும், அதிக நீளமாகவும், நடுவில் உப்பி விரிந்தும், முன்பக்கம் தள்ளி பார்வைக்கு விகாரமாயும், தொப்பிளைச் சுற்றிலும் சிறு கொப்பளங்கள் ஏற்பட்டும், நான்கு பக்கங்களிலும் உப்பி நடுவில் குழிந்தும், அடிக்கடி வாயு உள்ளுக்குள் சேர்ந்து உப்பிக் கொண்டும், இவ்விதம் பல விகாரமான தொந்த்ரவுகள் ஏற்படும். இவை உண்டாகாமல் இருக்க சரியாகக் கவனித்து முறைப்படி தொப்பிள் கொடியை அறுக்க வேண்டும்.

தொப்பிள் கொடி அறுப்பதற்கு நல்ல கத்தரிக்கோல் அல்லது கூர்மையான கத்தி ஒன்றும், கொதிக்க வைத்த வெந்நீரும் அதில் போட்டு வைத்த இரண்டு பட்டுக் கயிறுகள் அல்லது நூல்கயிறுகள் தயாராக இருக்கவேண்டும். வெந்நீரில் இருக்கும் கயிறுகளில் ஒன்றை எடுத்து தொப்பிளிலிருந்து நான்கு விரல்கள் அல்லது இரண்டு அங்குலம் விட்டு நன்ருக இறுக்கி ஓர் கட்டுப் போடவேண்டும்.

பிறகு நான்கு விரல்கள் விட்டு மற்ருெரு கட்டுப் போட வேண்டும். இந்த இரண்டு கட்டுகளுக்கும் நடுவில் அறுக்கவேண்டும். அறுக்கும் பொழுது கத்தியை சிறிது சாய்த்து மேல் நோக்கின முனையாக அறுக்கவேண்டும். தொப்புள் கொடி அறுப்பதற்கு உபயோகப்படுத்தும் கத்தியும் சரடும் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும். ஆகையால் வெறும் வெந்நீரில் போடுவதை விட, வேப்பிலை மஞ்சள் கலந்து கொதிக்க வைத்த வெந்நீரில் அவற்றைப் போட்டு வைத்திருப்பது நலம். அறுத்தவுடன், முன் வியாசத்தில் சொல்லியபடி, கோஷ்டத்தைப் போட்டுக் காய்ச்சின தைலத்தை அறுத்த இடத்தில் தாரையாக விடவேண்டும். பிறகு தேவதாரு, அதிமதுரம், லோத்திரப்பட்டை (பாச்சோத்தி தொலி), ஞாழல் பூ, மஞ்சள் இவற்றில் கிடைத்தவைகளைச் சூர்ணம் செய்து அறுத்த இடத்தில் போட்டு வரவேண்டும். இவ்விதம் செய்வதால், நவீனர்கள் பயமுறுத்தும் வ்ரண தோஷங்கள் ஏற்படாமல் (Antiseptic Precaution) தடுப்பதுடன், ஆக்ஷேபம் (Tetanus) முதலியதுகளும் பக்கத்தில் வராது.

சிலர் நஞ்சு விழும் வரையிலும் தொப்புள் கொடியை அறுக்காமலே இருப்பது ஓர் சம்பிரதாயமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள். நஞ்சு தாமதமாக விழுவதாக இருந்தால் அதுவரையிலும் குழந்தையை சுத்தம் செய்யாமல் வெட்ட வெளியில் போட்டிருப்பது எவ்வளவு கொடுமை என்பதை அறிந்து, துடிப்பு நின்றவுடன் சாதாரண காலங்களிலும், மூர்ச்சையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சிகித்ஸை செய்வதற்காக உடனடியாகவும் தொப்புள் கொடியை அறுத்துவிடவேண்டும். பிறகு கீழே சொல்லப்படும் உபசாரங்களைச் செய்யவேண்டும்.

மூர்ச்சை நிலைமையில் இருக்கும் குழந்தையை முதல் முதலில் இளம் சூடான ஜலத்தில் வைக்கவேண்டும், (அதாவது ஓர் பரந்த பாத்திரத்தில் ஜலம் விட்டு அதில் வைக்க வேண்டும்). பிறகு குழந்தையின் தொண்டையில் கபம் அடைத்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

गर्भाम्भसामवमनात् श्लेष्मणः कण्ठगस्य वा संपर्कात् हृदये दुष्टो मार्गानावृणुते रसः । बद्धमुष्टिस्ततो मुह्यन्— என்று ஸங்கிரஹத்தில் சொல்லுவதை அனுசரித்து, தொண்டையில் அடைத்துக் கொண்டிருக்கும் கபத்தை வெளிப்படுத்தவேண்டியது முதல் வேலை. தொண்டையில் கபம் அடைத்திருந்தால் அதை வெளிப்படுத்தாமல் வேறு செய்யப்படும் எவ்வித முயற்சியும் பலன் அளிக்காது. முதலில் சுத்தமாக நகம் இல்லாத விரல்களை இந்துப்புத் தூளில் தோய்த்துத் தொண்டையில் விட்டு கபத்தை எடுக்கலாம். இவ்விதம் கபத்தை எடுக்கும் பொழுது குழந்தையைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு (அதாவது இரண்டு கால்களையும் இடதுகையால் கெட்டியாகப் பிடித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டுக் கொண்டு) வலதுகை சுண்டுவிரல் அல்லது பவித்ரவிரலால் தொண்டையில் இருக்கும் கபத்தைத் தோண்டி யெடுக்க வேண்டும். இதில் சரியானபடி கபம் வராவிடில், வாழை இலைக் குருத்தை நடுவில் இடம் விட்டு ஒரு குழாய் போல் செய்துகொண்டு, குழந்தையின் தொண்டை வரையில் விட்டு, பின்பக்கத்தில் வாயால் உறிஞ்சி கபத்தை எடுத்து விடலாம். மிருதுவான மூங்கில் குழாய், கொம்பு, கண்ணாடிக்குழாய் முதலியதும் உபயோகப் படுத்தலாம். நடுவில் ஓர் குமிழ் (Bulb) இருக்கும் கண்ணாடிக் குழாயாக இருந்தால் உறிஞ்சி யெடுப்பவர் வாயில் குழந்தையின் வாயிலிருந்து வரும் கபம் முதலியது வராமல் குழாயின் நடுவிலிருக்கும் (Bulb) குமிழில் தங்கிவிடும்.

மேலே சொல்லியபடி கபத்தை யெடுத்த பிறகு, குழந்தைக்கு மூச்சு வரும் உபாயத்தைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். கபத்தை எடுக்காமல் சரீராப்யாசங்கள் செய்து மூச்சுக் கொண்டுவர முயற்சித்தால் விபரீத பலன் ஏற்படும். அதாவது தொண்டையில் தங்கியிருக்கும் கபம் சுவாசக்குழாயில் போய் அடைத்துக் கொண்டு விட்டால், சுவாசம் வெளியே வரமுடியாமல் ஹிருதயம் நின்றுபோய் விடும். ஆகையால் இதை முக்கியமாகக் கவனிப்பதுடன், பிறந்தவுடன் குழந்தைக்கு மூச்சில்லாமல் வெளுத்தோ, நீலம் பாரித்தோ போயிருப்பதைக் கண்டு, உயிர் இல்லாத

தாக நினைத்து உபேக்ஷை செய்யாமல், மூச்சு உண்டுபண்ணும் முயற்சிகள் பலவும் செய்துபார்க்கவேண்டும். இவ்விதம் செய்வதால் மிகுந்த காலம் கழித்தும் மூச்சு வருவதுண்டு.

பாரதயுத்தத்தில் அச்வத்தாமா பாண்டவ வம்சத்தையே மிச்சமில்லாமல் செய்ய விரும்பி ஓர் அஸ்திரம் பிரயோகித்ததாகவும், அந்த அஸ்திரம் பாண்டவர் வம்சத்திற்குக் கருவாக கர்ப்பத்திலிருக்கும் பரீக்ஷித் மஹாராஜாவையும் பாதித்ததாகவும், அந்த சமயம் பரீக்ஷித் மஹாராஜாவின் தாயார், द्रौण्यस्त्रविप्लुष्टमिदं मदङ्गं सन्तानबीजं कुरुपाण्डवानाम्— என்று ஸ்ரீ கண்ணபிரானை அந்தரங்க பக்தியுடன் கதறி அழைத்தவுடன், பகவான் தனது யோக சக்தியால் கர்ப்பத்திலிருக்கும் குழந்தைக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும், உயிர் நீங்காமல் காப்பாற்றி வைத்திருந்ததால், பிரஸவமான பொழுது உயிர் நீங்கின குழந்தை போல் காணப்பட்டது. மறுபடியும் மூச்சு வரலாம் என்று நினைத்து சிலகாலம் மூச்சு வரக்கூடிய முயற்சிகள் செய்து, பிறகு குழந்தைக்கு மூச்சு வந்து, பாரதகண்டத்திற்கே பரம தார்மிக சக்கிரவர்த்தியாக விளங்கினதாக சரித்திரம் கூறுகின்றது. பல பரீக்ஷைகள் செய்து பலகாலம் பார்த்திருந்து மூச்சு வந்ததால் பரீக்ஷித் என்ற பெயர் சரியான அர்த்தத்தின் பேரிலேயே அமையப் பெற்றது.

ஆகையால் பிரஸவமானவுடன் குழந்தைக்கு மூச்சு இல்லாமல் இருந்தபோதிலும், பலமுறையில் பரீக்ஷிக்க வேண்டும். மூச்சு நின்று அதிக காலம் ஏற்பட்டு, நீல நிறம் மாறி குழந்தை ரக்த ஓட்டமில்லாத வெள்ளைநிறம் அடைந்திருந்தால், உடனே வெந்நீரில் போட்டுப் போட்டுத் தொடர்ந்து கீழேகுறிப்பிட்டமாதிரி மூச்சுத் தூண்டும் முயற்சி நடத்த வேண்டும். குழந்தையின் தோலுக்குத் தகுந்த சூடாக வெந்நீர் இருக்கவேண்டும். வெந்நீரில் சிறிது போட்டதும் குழந்தையை எடுத்து மலந்து, முதுகுப் பக்கம் இரண்டு கைகளாலும் தாங்கி, மார்பு உயர்ந்தும் தலை கைகளும் கால்களும் தொங்கும்படியாகப் பிடிக்க

வேண்டும். இவ்விதம் பிடிப்பதால் மார்பு விரிந்துகொடுத்து வெளியிலிருந்து பிராணவாயு உள்புக சௌகரியம் ஏற்படுகிறது. பிறகு மார்பு பக்கம் கொஞ்சம் சுருங்கும்படியாக வலது கையைக் குழந்தையின் ஆஸனத்திலும், இடது கையைக் குழந்தையின் கழுத்திலும் பின்பக்கம் தாங்கிப் பிடித்து, உள்பக்கமாகக் கொஞ்சம் வளைந்தால்போல் நேராகப் பிடிக்கவேண்டும். பிறகு இடது கையைக் கொஞ்சம் முதுகுப்பக்கம் கொடுத்துத் தாங்கிக்கொண்டு உள்பக்கம் நன்றாக வளைக்க வேண்டும். இவ்விதம் வளைக்கும்பொழுது உள்ளிருந்து மூச்சு வெளிவிட உதவியாக இருக்கும். இவ்விதமாக மூச்சுத் தூண்டும் முயற்சி ஒரு நிமிஷத்துக்குப் பத்துத்தடவைகள் திருப்பித் திருப்பிச் செய்யவேண்டும். பிறகு ஒரு தடவை வெந்நீரில் போட்டு எடுக்கவேண்டும். பிறகு நன்றாகத் துடைத்து மறுபடியும் முன்போல மூச்சு வரும் முயற்சியைத் திருப்பித் திருப்பிச் செய்யவேண்டும். குழந்தையின் சரீர உஷ்ணத்தைப் பாதுகாக்க இடையிடையே குழந்தையை வெந்நீரில் நனைத்துத் துடைக்கத் தவறக்கூடாது. இவ்விதம் செய்யும்பொழுது குழந்தையின் உடம்பு மூச்சுவரும் அறிகுறியாகக் கொஞ்சம் நீலநிறம் வர ஆரம்பித்தாலும், அல்லது மூச்சுத் தூண்டும் முயற்சிகள் ஆரம்பிக்கப்படும்பொழுது மூச்சு நின்று அதிக காலம் ஏற்படாததால் நீலநிறமாகவே இருந்தாலும், குழந்தையை வெந்நீரிலும் குளிர்ந்த ஜலத்திலும் மாறி மாறிப் போட்டு, முன் குறிப்பிட்ட சரீராப்பியாசம் (மூச்சுத் தூண்டும் முயற்சி) செய்யவேண்டும்.

பிராணவாயு தேவையான அளவுக்கு உள்ளுக்குச் சென்று ரக்தம் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதால் (அதாவது உள்ளுக்கு மூச்சு இழுக்கும் சக்தி இல்லாததால் தான்) ரக்தத்தில் கறுப்பு நிறம் தோன்றுகிறது. இந்நிலைமையில் வெந்நீரிலும் குளிர்ந்த ஜலத்திலும் மாறி மாறி குழந்தையை நனைப்பதால், அதன் சரீரத்தில் (Reflex Action) இயற்கைத் தூண்டுதலால் ஓர் எதிரிடையான வேலை ஏற்பட்டு, குழந்தை அழவோ மூச்சுவிடவோ ஆரம்பிக்கிறது. உடம்பு கறுப்பு இல்லாமல் முற்றிலும் வெளுத்

துப்போன நிலைமையில் இவ்விதம் செய்தால் இருக்கிற உஷ்ணமும் குறைந்துபோய் அபாயம் நேரிடும். ஆகையால் அந்நிலைமையில் சூடான ஜலத்தில் மட்டும் குழந்தையைப் போட்டு எடுக்கவேண்டும். கறுப்பு நிலைமை ஏற்பட்டால் குளிர்ந்த ஜலத்தை முகத்தில் அடிப்பதனாலும் சிறிது சுரணை ஏற்படும். குழந்தை முகத்தில் ஓர் லேசான துணியைப் போட்டு, சுக்கை கொஞ்சம் வாயில் போட்டுக் கடித்து அந்த வாயால் குழந்தையின் வாய், காது இவைகளில் பலமாக ஊதிக் காற்றை உள்ளுக்குச் செலுத்தவும்.

இம்மாதிரி முயற்சிகள் மிகவும் அசாதாரண நிலைமையில் கூட விடாமல் செய்து உயிர் வரக்கூடும். சாதாரண நிலைமையில் (அதாவது அதிக ஜலம் சாப்பிடாமலும், தொண்டையில் கபம் அதிகமாக அடைக்காமலும், மூச்சு அடங்கி காலதாமதம் ஏற்படாததால் நீலம், வெளுப்பு முதலிய நிறபேதம் ஏற்படுவதற்கு முன்) இரண்டு கற்களை எடுத்து குழந்தையின் காதிற்குப் பக்கம் கொண்டுபோய் ஒன்றுக்கொன்று தட்டவும். முகத்தில் வெந்நீரும் குளிர்ந்த ஜலமும் மாற்றி மாற்றி இறைக்கவும். குழந்தை மூச்சு வந்து அழ ஆரம்பிக்கும். இவைகளில் மூச்சுவராமலும் அழாமலும் இருந்தால் முன் குறிப்பிட்ட மாதிரி நிலைமைகளை அறிந்து மூச்சுவர முயற்சிப்பதுடன், ஓர் முறத்தால் குழந்தையை வீசவேண்டும். இது சரகாசாரியர் சொன்ன ஓர் உயர்ந்த மூச்சுத் தூண்டும் முறை. இதனால் சரீரத்தின் எல்லாத் துவாரங்களின் வழியாகவும் வாயு உள்புகும். இந்தமாதிரி முயற்சிகள் சிறிது காலம் செய்துவிட்டு நிறுத்தக்கூடாது. சரீரத்தில் நுட்பமாக உயிர் இருந்து முயற்சியில்லாமல் கெடுத்துவிடக் கூடாது. சரகாசாரியர் **यावत्प्राणानां प्रत्यागमनं तत्तत्सर्वमेव कार्यम्** என்று உபதேசிக்கிறார். ஆகையால் குறைந்தது ஒருமுகூர்த்த காலமாவது ($1\frac{1}{2}$ மணி நேரம்) முயற்சிகள் தொடர்ந்து செய்யப்பட வேண்டும்.

இந்தமாதிரி நிலைமையில் வெளிப்பார்வைக்கு உயிர் இல்லாதமாதிரி இருந்தாலும், உண்மையில் உயிர் உள்ளடங்கி வெகுகாலம் இருக்கக்கூடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தமாதிரியான

அசாதாரண நிலைமைகள் மிகவும் அபூர்வம். சாதாரண நிலைமையில் குழந்தை பிறந்தவுடன் அழும். அழுவதிலிருந்தே குழந்தையின் உயிர் நல்ல நிலைமையில் இருப்பதைத் தீர்மானிக்கலாம். இவ்விதமிருந்தால் கிரமமாகத் தொப்புள் கொடி அறுத்த பிறகு ஸ்நானம் செய்துவைக்க வேண்டும். நல்ல தைலங்கள் அல்லது நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் உபயோகப் படுத்தலாம்.

கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை கர்ப்பாசயத்தில் ஜலத்திலேயே வசிக்க வேண்டியிருந்ததால் அந்த ஜலம் பாதிக்காமலிருப்பதற்காக இயற்கையாகவே குழந்தையின் உடம்பில் ஓர் மெழுகுப் பற்று அமையப் பெற்றிருக்கிறது. இந்த மெழுகு போன்ற ஆவரணத்தின் (Coating) பாதுகாப்பால் குழந்தையின் தோல் கர்ப்பஜலத்தால் பாதிக்கப்படாமல் இருக்கமுடிந்தது. வெளி வந்தவுடன் இந்தப் பற்றின் தேவை முடிந்துவிட்டதால், இதைப் போக்கடிக்க வேண்டும். ஸோப்பு, சீயக்காய்த் தூள் முதலியதால் எல்லாம் இதைப் போக்கடிக்க முடியாது. எண்ணெய் தேய்ப்பதால் தான் இது விலகும். உண்மையில் சரீரத்தில் இருக்கும் எல்லா அழுக்குகளையும் போக்கடிக்கும் சக்தி எண்ணெய் ஸ்நானத்திற்குத் தான் உள்ளது. அதனால்தான் அதை மலாபகர்ஷண (**मलापकर्षण**) ஸ்நானம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சாஸ்திர முறைப்படி செய்த தைலங்களாக இருந்தால் அப்படியே உபயோகிக்கலாம். இல்லாவிடில் நன்றாக சுடவைத்து இளம் சூடான எண்ணெயை உபயோகிக்க வேண்டும். சுத்தமான சிறு துணித் துண்டை எண்ணெயில் தோய்த்துத் தோய்த்து உடம்பில் தேய்த்து அதன் மேல் பற்றியிருக்கும் மெழுகுப்பற்றை எடுக்கவேண்டும். அதிகக் குளிர்ச்சியான இடத்தில் வைத்து எண்ணெய் தேய்ப்பதால் சைத்யத்தினால் பாதிக்கப்படும். நன்றாக எண்ணெய் தேய்த்து பிறகு வெந்நீரில் நனைத்த துணியால் உடம்பைத் தேய்த்து, சுகோஷ்ணமான (முன் வியாசத்தில் சொல்லப்பட்ட மருந்துகளால் தயார் செய்யப்பட்ட) வெந்நீரில் ஸ்நானம் செய்துவைத்து நல்ல துணியால் துடைக்கவேண்டும்.

பிறகு **अथास्य ताल्वोष्ठकण्ठजिह्वाप्रमार्जनमारभेत अङ्गुल्यासु परिलिखित नखयासुप्रक्षालितोपधानकार्पासपिचुमत्या** — என்று சரகத்தில்

கூறுகிறபடி, நகம் இல்லாத சுத்தமான விரலில் சுத்தமான பஞ்சை சுற்றிக்கொண்டு குழந்தையின் முகவாய்க்கட்டை, உதடு, தொண்டை, நாக்கு முதலியவற்றைச் சுத்தம் செய்யவும். பிறகு வலதுகை ஆள்காட்டி விரலால் முகவாய்க் கட்டை, மூக்கு, கண் முதலியவற்றை நன்குக நிமிர்த்தி விடவேண்டும். பிறந்தவுடன் இவ்விதம் தலை, மூக்கு முதலியவற்றைச் சரி செய்யாமல் விட்டுவிட்டால், கர்ப்பத்தில் குறுகி யிருந்த நரம்புகளுடன் கூடிய அங்கங்கள் நல்ல முறையில் வளரமுடியாமல் போய்விடும். உச்சியில் எண்ணெய் வைப்பது நமது தேகத்தின் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமான விஷயம். சரீரத்தின் பல சூக்ஷ்ம தத்வங்கள் அடங்கிய ப்ரம்மரந்த்ரம் என்னும் உச்சியில் குழந்தைகளுக்கு ஓர் பள்ளம் இருக்கும். வயதாக வயதாக இது கெட்டிப்பட்டு மூடிவரும். பிறந்தது முதல் கொண்டே இந்த இடத்தை எண்ணெய்ப் பசையுடன் காப்பாற்றவேண்டும். சுத்தமான துணித் துண்டு அல்லது பஞ்சில் ஆமணக்கெண்ணெயைத் தோய்த்து இவ்விடத்தில் போடவேண்டும்.

பிறகு குழந்தையை வாந்தியெடுக்கும்படி செய்ய வேண்டும். அநேகமாக குழந்தைகள் கொஞ்சமாவது கர்ப்பஜலம் குடிக்காமல் இருக்காது. அதை வெளிப்படுத்தாமல் இருந்தால் பிற்காலத்தில் பல நோய்கள் ஏற்படும். குறைந்த அளவில் கர்ப்பஜலத்தைக் குடித்திருந்தால் மூச்சு அடைப்பு முதலிய குறிகள் இருக்காது. சாதாரணமாகத்தான் தோன்றும். இருந்தாலும் குழந்தையை வாந்தி யெடுக்கும்படி செய்து, கர்ப்ப ஜலம், கபம் முதலியவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

**रोगैर्बालोऽभिभूयते हृद्रोगाक्षेपक श्वासकासच्छर्दिज्वरादिभिः**— என்று ஸங்கிரஹத்தில் கூறியபடி பலவியாதிகள் பிற்காலத்தில் ஏற்படலாம். ஆகையால் **गर्भाम्भः सैन्धववता सर्पिषा वामयेत्ततः**— என்று கூறியபடி, கொஞ்சம் நெய்யில் இந்துப்புக் கலந்து கொடுக்க வாந்தியாகும். ஜலம், கபம் முதலியவை உள் தங்கி யிருந்தால் வாந்தியில் வெளிவரும்.

# மணி—மந்திர—அவுஷத ஆராய்ச்சி

[டாக்டர். T. G. ராமமூர்த்தி அய்யர்,
ரிடயர்ட் மெடிகலாபீசர், ஈரோடு.]

முன் வியாசத்தில் நம் தேசீய வைத்தியத்தின் பொது விஷயங்களை சற்று தெளிவுபட ஆராய்ந்தோம். இனி சில நுட்பமான விஷயங்களை ஆராய்வோம்.

இந்தியாவில் பல்லாயிர வருஷங்களாக வழங்கிவரும் வைத்திய கலைக்கு, ஆயுர்வேதமென்றும், சித்தவைத்திய மென்றும் பெயர்.

ஆயுர்வேதமானது மஹரிஷிகள் பரம்பரையினர் இயற்றிய கிரந்தங்களென்றும், சித்த வைத்தியமென்பது, தமிழ்நாட்டு சித்தர்கள் பரம்பரையினர் வகுத்தமுறை என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இவ்விரு வைத்தியங்களுக்கும் அடிப்படையான தத்துவம் ஒன்றேயாகும்.

இவ்வைத்தியங்களின் பொது தத்துவம் யாதெனில், உலகத்திலுள்ள ஜீவராசிகள் யாவும் க்ஷுத்ர அண்டங்களென்றும் (Microcosm), இவை யாவும் பிரமாண்டமென்றும் (Macrocosm) விசாலமான உலகத்தின் ஸ்வரூபமென்றும், பிரமாண்டத்தில் காணப்படும், கிரகங்கள், நக்ஷத்ரங்கள், முதலிய யாவும், ஜீவராசிகளின் சரீரத்தில், சக்தி (Energy) வடிவாக அமைந்திருக்கிறதென்றும், இச் சக்தியானது, அக்கினியில் சூடு எப்படி அடங்கி யிருக்கிறதோ அப்படிப்பட்ட குணரூப லக்ஷணமுடையதென்றும், அப்பேர்ப்பட்ட சக்தியானது சப்தம் (Sound) தானென்றும், இச்சப்தத்தினின்றும், பஞ்சதன்மாத்திரைகளை யுடைய பஞ்சபூதங்கள் சூக்ஷ்மரூபமாகத் தோன்றி, ஸ்தூலபூதங்களாகி, சப்த தாதுக்களாக மாறி ஸ்தூல சரீரமாயமைகிறதென்றும், இப்படித் தோன்றிய ஜீவராசிகள் ஒவ்

வொன்றினுள்ளும், அணுப்பிரமாணமான (Atomic)ஞான வடிவான, பிரகாசம் பொருந்திய (Electrical spark), உயிராகிய "ஜீவாத்மா" என்பது, 36 தத்துவங்களென்றும், 5 சூக்ஷ்மரூப பஞ்சபூத வித்துக்கள், 5 தன்மாத்திரைகள் (Senses), 5 ஞானேந்திரியங்கள் (Instruments of sensory organs or actions), 5 கன்மேந்திரியங்கள் (Instruments of docomotor actions), 4 அந்தக்கரணங்கள் (Mental actions), 7 வித்தியா தத்துவங்கள் (Instruments that carry out, determine the time, and subject the person to undergo the various ordeals of life), 5 சிவ தத்துவங்கள் (Instruments of creation, protection, and destruction of the physical body), ஆகிய 36 வகையான, உள் நிலைக் கருவிகளை சூக்ஷ்ம சரீரமாகக் கொண்டு, 60 புற நிலைக் கருவிகளைத் தோற்றுவிக்க வல்லதாயும், அச்சரீரத்தை இயக்க வல்லதாயும், அமைந்திருக்கிறதென்றும், இப்பேர்ப்பட்ட ஸ்வரூபலக்ஷணம் பொருந்திய, உயிராய் விளங்கும் ஜீவாத்மாதான், ஈ, எறும்பு, புழு, மனிதன், யானை, திமிங்கிலம், விருக்ஷ ராசிகள், இன்னும் ஆகாய வாசிகளான சூர்யன், சந்திரன், முதலிய கிரகங்களிலும், நக்ஷத்ரங்களிலும் இயங்குகிறதென்றும், இவ்வித ஜீவாத்மாக்கள், பிரமாண்டமாக விளங்கும் பரமாத்மாவின் ஸ்வரூபமே, மஹா மாயை என்றும் மூலப்பிரகிருதி (Root of nature) யில் பிரதி பிம்பிக்கும் போது, பிரபஞ்சமாகத் தோன்றுகிறதென்றும், இப்பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்க எண்ணிய, சர்வ வல்லமை பொருந்திய, சத்–சித்–ஆனந்த ஸ்வரூபியான, பரமேச்வரனே, தன்னிடமுள்ள சக்தியை வியாபிக்கச் செய்து, அச்சக்தியினுள்ளிருக்கும் மாயா சக்தியைக் கொண்டு இப்பிரபஞ்சத்தை தோற்றுவித்தாரென்றும், இப்படித் தோன்றிய ஜீவாத்மாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் பிரத்யேக சரீரம் உண்டாகவேண்டி தன்னிடமுள்ள மூலப்பிரகிருதியின் சூக்ஷ்ம பிரதிபிம்பமாகிய, பிரகிருதி மாயை, குண்டலி, என்னும் (Seed of nature) சக்தியை, பிரதி சரீரத்திலும் அமைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. இப்படித்தோன்

றிய பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகள் யாவும், சிவனிட மிருந்து தோன்றிய ஒரே சக்தியால் இயங்குகிறது. இந்த சக்தியைத் தான் சித்தர்கள், "நாடி," என்பதாக விளக்கு கிறார்கள். சக்தி (Energy)யே, சப்தம் (Sound) என்றும், சப்தமே சக்தி யென்றும் அறிவிக்கப்படுகிறது. பிரபஞ்சம் யாவும் சப்தமே ரூப நாம பேதங்களாய் விளங்குகிறதென் றும், பிரளயத்தில் (Deluge) இவை யாவும் சப்தமாகவே மாயா சக்தியால் ஒடுங்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விதமாக தோன்றிய மனிதனைத்தான் சர்ஜான் உட்ரூப் என்கிற ஆர்தர் ஆவலான் "Man is a Magazine of Power", மனிதன் வல்லமை பொருந்திய யந்திர பீரங்கி என்பதாக Serpent power என்கிற பதஞ்சலி :யோக சாஸ்திர வியாக்யான நூலில் தெரிவிக்கிறார்.

இப்படியமைந்த ஜீவசரீரத்தில், பஞ்சதன்மாத்திரை களைக் கொண்ட பஞ்ச சூக்ஷ்ம பூதங்களா யெழுந்து சப்த தாதுக்களாய் தோற்றுவிக்கும் செய்கைக்கு, "திரி தோஷம்" எனப் பெயர்.

திரிதோஷம்— வாதம், பித்தம், கபம் என மூன்று தனிப்பட்ட செய்கையாகும்.

